[1981 ஏப்ரல் 28

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, வருடத்திற்கு ரூபாய் 2 கோடி 66 இலட்சத்திற்கு மேற்பட்ட மதிப்புள்ள மருந்துகள் அரசு மருத்துவமனைகளுக்காக வாங்கப்படுவதாக அறிவித்தார்கள். இந்த மருந்துகளை தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய முறையிலே இங்கேயே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஐ.டி.பி.எல். தமிழ் நாட்டிலேயே இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல் நம்முடைய பணமும் போடப்பட்டு ஜாயின்ட் செக்டாரிலே தான் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தாதா என்ற இந்த கம்பெனியிலே இருந்துதான் மருந்துகளை வாங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங்குகின்ற மருந்துகளைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலே இருக்கக்கூடிய கம்பெனியிலே தயாரிக்கக்கூடிய மருந்தாகத்தான் அவை இருக்கின்றன. மேலும் ஐ.டி.பி.எல்; என்பது அரசாங்கத்தினுடைய ஒரு பொதுத்துறை நிறுவனமாகும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, ஐ.டி.பி.எல். இடமிருந்து வாங்கப்படுகின்ற மருந்தின் தரம் பிரைவேட் கம்பெனியிடமிருந்து வாங்கப்படுகின்ற மருந்தை விடக் குறைவாக இருக்கின்றன என்று சொல்லப்படுவது உண்மையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசாங்கத்தினுடைய நிறுவனத்தில் தயாரிக்கப்படுகின்ற மருந்தின் தரத்தைப்பற்றி இப்போது கேள்வி கேட்டுப் பயன் இல்லை.

குடந்தை அரசினர் மருத்துவமனை.

* வினா எண் 920—திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடந்தை அரசினர் மருத்துவமனையில் அன்றாடம் வரும் புற நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) இருக்கின்ற படுக்கைகளை கூடுதலாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 1,392.

(ஆ) இம் மருத்துவமனையில் கூடுதலாக 50 படுக்கைகள் போட ஏதுவாக புதிய பகுதிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS